**தலைப்பு 299 – இலங்கை புலமைச் சொத்து அலுவலகம்**
-----------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 299 - இலங்கை புலமைச் சொத்து அலுவலகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளிலும் ஏனைய விளக்கத் தகவல்களிலுனதும் பொழிப்புக்களை உள்ளடக்கக் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் இலங்கை புலமைச் சொத்து அலுவலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2024 ஜூன் 11 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் இலங்கை புலமைச் சொத்து அலுவலகம் தொடர்பான வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2024 ஜூலை 05 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்களில் 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான இலங்கை புலமைச் சொத்து அலுவலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையின் பந்தி 1.6 இல் காட்டப்பட்டுள்ள விடயத்தின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய

வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அலுவலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1) உப பிரிவின் பிரகாரம் அலுவலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக வெற்றிகரமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்,

- தெரிவித்துக் கொண்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக அடிப்படை ஒன்றினை பெற்றுக் கொள்ளும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்கள் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) இவ்வறிக்கையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளது.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது நான் மேற்கொண்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் திறைசேரி கட்டுநிதி பெறுவனவுகள் மற்றும் திறைசேரிக்கு அனுப்பப்பட்டவைகள் முறையே ரூபா 48,291,000 தொகை மற்றும் ரூபா 870,915 தொகை எனினும் நிதிச் செயலாற்றுகை கூற்றில் முறையே ரூபா 48,039,988 தொகை மற்றும் ரூபா 619,903 தொகை என காட்டப்பட்டிருந்தது. | நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பதற்காக 2023.12.31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட CIGAS நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் பெற்றுக் கொண்ட பரீட்சை மீதியை பயன்படுத்தி இருந்ததெனவும் மற்றும் அதன்படி பரீட்சை மீதியின் கட்டுநிதி கணக்கிற்கு உரிய 7002 இல் வரவு மற்றும் செலவு மீதியில் நிதிச் செயலாற்றல் கூற்றில் உட்படுத்தப்பட்டது என. | சரியாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் காசாக கட்டுநிதி தீர்க்கப்படல் ரூபா 870,915 தொகை எனினும் கட்டுநிதிக் கணக்கு தொடர்பாக கூற்றில் (ஏசீஏ-3) இல் ரூபா 915 என காட்டப்பட்டிருந்த காரணத்தினால் செலவுகளின் மூலம் கட்டுநிதி தீர்த்தல் ரூபா 870,000 இனால் அதிகரித்திருந்தது. | 2023 ஜூன் மாதம் தீர்க்கப்பட்ட கட்டுநிதி மீதி விடுபட்டு இருந்ததெனவும் இவ்வாறான தாமதங்களை எதிர்காலத்தில் தவிர்ந்து கொள்வதற்காக குறித்துக் கொள்ளப்பட்டது எனவும். | சரியாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 நவம்பர் 30 திகதிய 5/2023 இலக்கங் கொண்ட அரச கணக்கு வழிகாட்டலில் பிரிவு 3.4 இன் பிரகாரம் அனைத்து செலவு விடயங்களுக்குமாக மொத்த தேறிய ஏற்பாடுகள் மற்றும் உள்ளவாறான செலவுகள் இடையே வித்தியாசத்திற்காக காரணங்கள் ஏசீஏ-2(II) படிவத்தில் காட்டப்பட வேண்டியிருந்த போதிலும், மூலதனச் சொத்துக்கள் தனதாக்களின் கீழ் மென்பொருள் அபிவிருத்திக்காக ரூபா 10,000,000 இற்கான பாதீட்டு ஏற்பாடுகள் செலவிடப்படாமை தொடர்பான காரணங்கள் காட்டப்பட்டிருக்கவில்லை. | தவறுதலாக இது ACA 2(ii) படிவத்தில் உட்படுத்தப்படவில்லை என. | வழிகாட்டலுக்கு இணக்கமாக இருக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வியாபாரச் சின்னர், பேடன்ட் மற்றும் தொழிநுட்ப திட்ட தரவுகள் டிஜிடல் மயமாக்கும் கருமங்களுக்காக 2023 செயல் நடவடிக்கைத் திட்டத்தில் ரூபா 10.9 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் உலக புலமை சொத்து அலுவலகத்துடன் ஒத்த நிகழ்வாக செயற்திட்டம் செயற்படுத்தப்படுகின்றமையால் அந்த நிறுவனத்தினால் செயற்திட்டத்தை ஆரம்பிக்கும் வரை மீளாய்வாண்டின் போது அதன் செலவுகள் மேற்கொள்ளப்படாததுடன் சில ஆரம்ப அலுவல்கள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | இந்த செயற்திட்டத்திற்குரிய கோவைகளை நுட்பமாக ஆராய்வதற்காக வரைஞர் ஒருவர் தெரிவு செய்தல் 2023 ஆண்டின் திசெம்பர் மாதத்திலேயே ஆரம்பிக்கப்பட்டிருந்தது. உலக புலமை சொத்து அலுவலகம் செயற்திட்டத்தை ஆரம்பிக்கும் வரை புலமை சொத்து நிதியத்தின் மூலம் செலவிடுவதற்கு மதிப்பீடு செய்யப்பட்ட பணம் பயன்படுத்த முடியாமல் போனது என. | திட்டமிடப்பட்ட கருமங்கள் செயற்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இலங்கை தகவல்கள் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப முகவராண்மையில் இருந்து (ICTA) சர்வர் இயந்திரமொன்று கொள்வனவு செய்வதற்காக 2016 திசெம்பர் 30 திகதி புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றிற்கு அனுகி அத் திகதியன்றே ரூபா 32.5 மில்லியன் தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எனினும் அந்த உடன்படிக்கை சேவை கட்சிக்காரரினால் மீறியமையினால் செலுத்தப்பட்டிருந்த தொகையினை திருப்பி செலுத்துதலை விரைவுபடுத்துமாறு குறிப்பிட்ட வரிசை அமைச்சு மற்றும் தொழிநுட்ப அமைச்சின் மூலம் நிதியமைச்சுச் செயலாளருக்கு 2024 பெப்ரவரி 16 திகதி விண்ணப்பிக்கப்பட்ட போதிலும் அறிக்கைத் திகதி வரை பணம் கிடைத்திருக்கவில்லை. அதன் காரணமாக 2023 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் சர்வர் வசதிகள் வழங்குதல் உட்படுத்தியிருந்த போதும் அதனை நிறைவேற்றிக் கொள்வதற்கு முடியாமல் போயிருந்தது. | 2024.02.16 திகதி பணிப்பாளர் நாயகத்தினால் மற்றும் 2024.04.19 திகதி வரிசை அமைச்சுச் செயலாளரினால் நிதியமைச்சுச் செயலாளருக்கு கடிதம் அனுப்பியிருந்த போதிலும் அதற்கான பதில் இதுவரை கிடைத்திருக்கவில்லை என. | பணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. நல்லாளுகை

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உள்ளகக் கணக்காய்வு அலுவல்களுக்காக 04 வருட காலம் முதல் நிரந்தர கணக்காய்வாளர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டிருக்கவில்லை. | வெற்றிடத்திற்காக உத்தியோகத்தர் ஒருவரை இணைக்கும் படி பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என. | கணக்காய்வு சட்டத்தின் 40 ஆவது பிரிவிற்கு இணக்கமாக இருக்க வேண்டும். |

**5. மனித வள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மேலதிக பணிப்பாளர் நாயகப் பதவி 2015 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட நாள் முதல் வெற்றிடமாகக் காணப்படுவதுடன் 2015 மற்றும் 2016 ஆண்டுகளின் போது அங்கீகரிக்கப்பட்டிருந்த பிரிதி பணிப்பாளர்/ உதவிப் பணிப்பாளர் 03 பதவிகள் அங்கீகரிக்கப்பட்ட நாள் முதல் வெற்றிடமாகக் காணப்படுகின்றது. | உதவிப் பணிப்பாளர் (தகவல்கள் மற்றும் விசாரணைகள்) பதவிக்காக வரையறுக்கப்பட்ட அடிப்படையில் ஆட்சேர்ப்பதற்காக தகைமைகளை பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்கள் திணைக்களத்தில் காணப்படாமையால் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படவில்லை எனவும் அதே போல் உதவிப் பணிப்பாளர் (நிர்வாக) பதவியில் பதில் கடமையாற்றுவதற்காக 2023.06.15 திகதி முதல் இலங்கை நிர்வாக சேவையில் உத்தியோகத்தர் ஒருவர் இணைக்கப்பட்டிருந்த போதிலும் அந்த உத்தியோகத்தருக்கு அலுவலகத்தில் போதியளவு இடவசதிகள் காணப்படாமையால் பதில் கடமைப் பதவியிலிருந்து விலகிச் சென்றுள்ளார் என. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 10 அங்கீகரிக்கப்பட்ட பேடன்ட் உத்தியோகத்தர் பதவிகள் திணைக்களம் சார் பதவிகளாகக் காணப்பட்ட போதிலும் அதற்காக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்டிருந்தனர். அந்த உத்தியோகத்தர்களுக்கு புலமைச் சொத்துக்கள் விடயங்கள் தொடர்பாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி சந்தர்ப்பங்கள் 03 முதல் 26 வரை எண்ணிக்கையானவர்கள் பங்குபற்றியிருந்த போதிலும் இந்த உத்தியோகத்தர்களுக்கு | 10 பதவிகளும் வெற்றிடமாகக் காணப்படுகின்றமையால் இந்த பதவிகளுக்குரிய கடமைகள், விஞ்ஞானப் பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தரினால் நிறைவேற்றப்படுகின்றது. அந்த உத்தியோகத்தர்களுக்கு புலமைச் சொத்து விடயம் தொடர்பாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி சந்தர்ப்பங்கள் வழங்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவர்கள் இணைந்த சேவைகள் உத்தியோகதராக | நிறுவனத்தின் செயலாற்றுகை பாதுகாக்கப்படக் கூடியவாறு வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வருடாந்த இடமாற்றத்தின் கீழ் இடமாற்றம் கிடைப்பதனால் பேடன்ட் துறை தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட பயிற்சி பேடன்ட் பிரிவில் எதிர்கால செயலாற்றுகைக்கு பயன்படுத்த முடியாமையினால் அந்த செயலாற்றுகைக்கு பிரதிகூலமான வகையில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும் என அவதானிக்கப்பட்டது. | காணப்படுவதால் வருடாந்த இடமாற்றம் கட்டளைகளுக்கு அடியணிய வேண்டியிருக்கின்றது என. | |
| (இ) | வியாபாரச் சின்னங்கள் பதிவு செய்தல், புதுப்படுத்தல், மாற்றங்கள் செய்தல், சாட்டுதல் செய்தல் மற்றும் அங்கீகார உடன்படிக்கைகள் உட்பட விடயங்கள் சாட்டப்பட்டிருந்த புலமைச் சொத்து உத்தியோகத்தர்கள் 13 பதவிகளில் 08 பதவிகள் கணக்காய்வுத் திகதி அளவு வெற்றிடமாகக் காணப்பட்டதுடன், உத்தியோகத்தர் வெற்றிடம் வியாபாரச் சின்னப் பிரிவில் செயலாற்றுகைக்கு பிரதிகூலமான முறையில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடுமென அவதானிக்கப்பட்டது. | இந்த வெற்றிடப் பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு மேற்கொள்வதற்கு முகாமைத்துவ சேவை பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரம் கிடைத்திருந்தமையால் பரீட்சைகள் நடாத்துவதற்கான வர்த்தமானி அறிவித்தல் வரைவு தயாரிக்கப்பட்டு குறிப்பிட்ட வரிசை அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டது என. | - மேற்படி - |